செ.வெ.எண்:45 நாள்:20.07.2019

**விவசாயிகளுக்காக விவசாயிகளால் நீர்ஆதாரங்களை செம்மைபடுத்திடும் நோக்கில் குடிமராமத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தகவல் !!!**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, நஞ்சைகவுண்டன்புதூரிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ணா கல்யாண மண்டபத்தில் இன்று(20.07.2019) பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் மூலம் கஞ்சம்பட்டி நீரினை பயன்படுத்துவோர் சங்கம், நல்லூர் நீரினை பயன்படுத்துவோர் சங்கம், தொண்டாமுத்தூர் நீரினை பயன்படுத்துவோர் சங்கம், சமத்தூர் நீரினை பயன்படுத்துவோர் சங்கம், நாயக்கன்பாளையம் நீரினை பயன்படுத்துவோர் சங்கம், ஜமீன் ஊத்துக்குளி நீரினை பயன்படுத்துவோர் சங்கம், ஆகிய சங்கங்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். இப்பயிற்சி முகாமில் பொள்ளாச்சி வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.ரவிக்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.ஆனந்தன் (பரம்பிகுளம் கோட்டம்), கண்காணிப்பு பொறியாளர் திரு.பி.முத்துசாமி (பொள்ளாச்சி கோட்டம்), வட்டாட்சியர்கள் திரு.தணிகைவேல், திரு.வெங்கடச்சலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து பேசுகையில்,**

தமிழகத்தில் நீர்ஆதாரங்களை செம்மைப்படுத்தி, அதனை புணரமைத்து, விவசாயிகள் பயன்பெறும் வேண்டும் என்ற நோக்கில் ஏரிகள், குளங்கள், மற்றும் நீர்வரத்து வாய்க்கால்கள் புணரமைக்கும் குடிமராமத்து திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது. அதன்படி, இந்த நிதியாண்டில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் 1829 பணிகள் ரூ.499.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழக அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. அதில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 45 பணிகள், ரூ.7.43 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது. அதில் 44பணிகள் பொள்ளாச்சி கோட்டத்திற்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும், பொதுப்பணித்துறை-நீர்வள ஆதாரத்துறை மூலம் பதிவு பெற்ற பாசன சங்கங்கள்

(அல்லது) நீரினை பயன்படுத்துவோர் சங்கங்கள் (அல்லது) பாசனதாரர்கள் தொகுப்பு வாயிலாக பணிகளை செயல்படுத்திட அரசு உரிய வழிமுறைகள் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கால்வாயில் வாயில் வளர்ந்துள்ள செடிகொடிகள் முட்புதர்களை அகற்றுதல், கால்வாயினை தூர்வாரி சுத்தம் செய்தல், கால்வாயில் சேதமடைந்துள்ள குறுக்கு கட்டங்களை பழுது பார்த்தல், பழுதடைந்த மடைகளை சீரமைத்தல், பழுதடைந்த ஷட்டர்களை புதுப்பித்தல், கால்வாய் கரைகளை பலப்படுத்துதல், குளங்களின் கரைகளை பலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

"பங்கேற்பு பாசன மேலாண்மையில்" (participatory Irrigation Management) விவசாயிகள் தங்களை செவ்வனே ஈடுபடுத்தி பங்களிப்பாக மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவீதம் பணமாகவோ, மனித உழைப்பாகவோ அல்லது பொருளாகவோ வழங்கிடவும், 90 சதவீதம் அரசின் நிதியாகவும் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆண்டு தோறும் குடிமராமத்துப் பணி மேற்கொள்ளப்படுவதால், நீர் நிலைகளில் கூடுதல் மழை நீரைத் தேக்கி வைப்பதாலும், நிலத்தடி நீர் மட்டம் உயர்கிறது. தூர்வாருவதற்காக தோண்டப்பட்ட சத்தான வண்டல் மண், வயல்களில் உரமாக இடப்படுகிறது. நீராதாரங்களை முறையாகவும் சிறப்பாகவும் பயன்படுத்திட தமிழ்நாடு அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. பொதுமக்கள் பங்களிப்புடன் குடிமராமத்து திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் குடிமராமத்து பணிகள் முன்னேற்றம் குறித்து பல கட்ட விழிப்புணர்வு ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் இத்திட்டம் சிறப்பாக செயல்படுகிறதா என்பதும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை எந்தத் தடையுமின்றி செப்டம்பர் 15-ஆம் தேதிக்குள் பணிகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு குடிமராமத்து பணி

தொடர்பான கோரிக்கைகள், சந்தேகங்களை விளக்குவதற்கு வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் அலுவலர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளை அரசு விவசாயிகளுடன் நேரடியாக தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்படுவதால் விவசாயிகளின் தேவைகள் மற்றும், நோக்கங்களை உடனடியாக பூர்த்தி செய்ய இயலும். அதுபோலவே, பசான விவசாய சங்கங்களும் தினசரி பண கையிருப்புப் பதிவேடு, வருகைப்பதிவேடு, ரசீது புத்தகம், செலவு பட்டியல் கோப்பு, மாதாந்திரப் பதிவேடு, உறுப்பினர் பதிவேடு, உறுப்பினர் கூட்டத்தில் தீர்மான புத்தகம், வேலையாட்களின் வருகைப் பதிவேடு, தளவாடங்களின் பதிவேடு, கட்டுமானப் பொருட்களின் பதிவேடு, தரக்கட்டுப்பாடு பணிப்பதிவேடு, விவசாயிகளின் பங்களிப்பு தொடர்பான பதிவேடு ஆகியவற்றினை முறையாக பராமரித்திடல் வேண்டும். விவசாய சங்கத்தினர் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பொதுப்பணித் துறை உயர் அலுவலர்களும் ஆய்வு மேற்கொள்ளும்போது காண்பித்திட வேண்டும்.

குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளும்போது, ஏரிகளின் மண் கரைகளைப் புணரமைத்தல்/ வலுப்படுத்துதல், பாசன மதகுகளை புனரமைத்தல், மிகை நீர் கலிங்குகளை பழுது பார்த்தல், கால்வாய்கள்/வழங்கு வாய்க்கால்களைப் புனரமைத்தல் ஆகிய நான்கு வழிகாட்டி நெறிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளவாறு முறைகளை பின்பற்றவேண்டும்.

வேளாண் பெருமக்களலால் அரசின் பங்களிப்பு தொகை 90% மீதி 10% விவசாயிகளால் பங்கு அளிக்கப்படுவதனால், விவசாயிகள் பணியின் தன்மை புரிந்து தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வினை ஏற்படுத்திட இயலும். மேலும், குடிமராமத்து திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை பொதுப்பணித்துறையின் தரக்கட்டுப்பாட்டு பிரிவு நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு வருகின்றது.

இது முழுக்க முழுக்க விவசாயிகளால் விவசாயிகளுக்காகவே மேற்கொள்ளப்படும் பணிகள் ஆகும், ஆகவே விவசாயிகள் தங்களின் பொறுப்பு உணர்ந்து இப்பணிகளை முழுவதும் தங்களது ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு பல ஆண்டுகளாக நீர் வழங்கிய வாய்க்கால்களை சீரமைத்திட உங்களுக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பு இதுவாகும். இப்பயிற்சி முகாம் உங்களது சந்தேகங்களை தீர்ப்பதற்காகவும் உங்களுக்கான ஒரு தெளிவுகளை வழங்கும் விதமாக இந்த பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது இதனை பயன்படுத்தி விவசாயிகள் அனைவரும் குடிமராமத்து பணியினை சிறப்பாகவும், விரைவாகவும் மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**